# பல்துறை நோக்கில் தமிழிலக்கியம்

## (கலை, இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள்)

# பவளம்





முதன்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் **வி. முத்து**

**பதிப்பாசிரியர்**

**முனைவர் மா. இராஜவேல் ☼ பேரா. இரா. ஏழுமலை**

தமிழ்த்துறை

இராஜா நந்திவர்மன் கலை, அறிவியல் கல்லூரி

தெள்ளார் - 604 406

திருவண்ணாமலை மாவட்டம், தமிழ்நாடு

# பல்துறை நோக்கில் தமிழிலக்கியம்

*(கலை, இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள்)*

# பவளம்


முதன்மைப் பதிப்பாசிரியர்

**முனைவர் வி. முத்து**

*பதிப்பாசிரியர்*

*முனைவர் மா. இராஜவேல்     பேரா. இரா. ஏழுமலை*



**ஹேமப்பிரியா பதிப்பகம்**

*79. மரக்காணம் சாலை,*

*நாகலாபுரம்,*

*திண்டிவனம் - 604 001.*

Rs.300.00

Palthurai Nokil Tamil Illakiyam
*Pavalam*

Publishing Editor : **Dr.V.Muthu**

Dr. M.Rajavel Prof. R. Elumalai

First Edition : 2014 April

Published by © : **King Nandhivarman College of Arts and Science**
Thellar - 604 406

Pathippagam : **Hemapriya Pathippagam**
79, Marakkanam Road,
Nagalapuram, Tindivanam - 604 001
Cell : 98948 23753

Printed at : **Kalai Offset,** Puducherry-13
Cell : 98946 34388

**ISBN No : 978 - 81 - 923186 - 1 - 5**

பல்துறை நோக்கில் தமிழிலக்கியம்
**பவளம்**

பதிப்பாசிரியர்கள் : **முனைவர் வி. முத்து**
முனைவர் மா.இராஜவேல் பேரா. இரா.ஏழுமலை

முதற்பதிப்பு : 2014 ஏப்ரல்
வெளியீடு : **இராஜா நந்திவர்மன் கலை, அறிவியல் கல்லூரி**
தெள்ளார் - 604 406
பதிப்பகம் : **ஹேமப்ரியா பதிப்பகம்**
79, மரக்காணம் சாலை, நாகலாபுரம்,
திண்டிவனம் 604 001
அச்சிட்டோர் : கலை ஆப்செட், புதுச்சேரி - 13

# 26. மக்கள் வாழ்வில் சமயம்: ஒரு சுருக்க அறிமுகம்

**சண்முகராஜா சிறிகாந்தன்**
முனைவர்பட்ட ஆய்வாளர், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி
விரிவுரையாளர், சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை
srikanthan80@gmail.com

மக்கள் வாழ்விலிருந்து பிரித்துணர முடியாத ஒன்றாக சமயம் உள்ளது. மனித பண்பாட்டு நாகரிக வளர்ச்சியில் சமயத்தின் இடம் முக்கியமானது. சமூகவியிலார்கள் சமயத்தினைச் சமூக நிறுவனமாக நோக்குகின்றனர். மானிடவியலாளர்களோ சமயம் பண்பாட்டின் ஓர் அலகு என்பார்கள். எனினும் இவ்விரு துறையினரும் சமயத்தினைக் குறிப்பிட்ட சமூகத்தினையும், அச் சமூகத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் விளங்கிக் கொள்வதற்கான ஒரு பிரதான கருவியாகவே நோக்கின்றனர். ஏனெனில் தனிமனி-சமூக வாழ்வினைத் தீர்மானிப்பதில் சமயத்தின் பங்கு முதன்மையானது. அன்றாட மனித வாழ்வில் இடம்பெறும் அதிகமான நிகழ்வுகள் அவரவர் சமயம் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், இன்னுப்பிற கூறுகளுடன் நெருங்கிய தொடர்புடையனவாகவே உள்ளன.

உலகளாவிய ரீதியில் சமய நம்பிக்கைகளும் சடங்குகளும் வேறுபட்ட வடிவங்களில் காணப்படுகின்றது. இவ்வாறு புறவய நோக்குநிலையில் (etic approaches) சமயங்களுக்கிடையில் வேறுபாடுகள் வெளிப்பட்டாலும் அகநிலை நோக்கினடியாக (emic approaches) பார்க்கும் போது உலக சமயங்கள் அனைத்தினதும் நோக்கம், இலக்கு என்பது ஒருமித்தக் கருத்துநிலை கொண்டதாக உள்ளது. உலகப் புகழ் பெற்ற மானிடவியல் அறிஞர் எட்வேட் ரைலர் அவர்கள் சமயத்தினை பின்வருமாறு வரையறை செய்கின்றார் ‘சமயம் என்பது இயற்கை கடந்த ஆற்றலின் மீது கொண்டுள்ள நம்பிக்கை’. இன்றுவரை அனைத்து அறிஞர்களாலும் சமயத்திற்கான குறைந்த பட்ச வரையாறையாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு சுட்டப் பெற்ற ‘நம்பிக்கை’ என்பது ஒவ்வொரு தனிமனிதனுடைய சமூகவாழ்வில் கணிசமான செல்வாக்கினைச் செலுத்துகின்றது. மேலும் இது அவர்களுடைய வாழ்வியல் கோலங்களையும், சமூக நடைத்தையினையும் கூட தீர்மானிக்கின்றது.

தொடக்க காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் இயற்கையின் சீற்றத்தினால் ஏற்பட்ட அச்சத்தில் இயற்கைப் பொருட்களை வழிபட்டு; காலப்போக்கில் அவற்றிக்கு உருவம், கருத்தியல் கொடுத்து வழிபாட்டுக்குரிய ஒன்றாக மாற்றியுள்ளனர். இந்நிலையில் உலகில் உள்ள அனைத்து சமயங்களினையும் மானிடவியலாளர்கள் பின்வரும் மூன்று வகைப்பாட்டினுள் ஆராய்க்கின்றனர். 1. உயர் சமயம், 2. சிறுசமயம், 3. தொன்மைச் சமயம் என வகைப்படுத்தினாலும் இவை ஒவ்வொன்றும் ஆயிரக்கணக்கான சமய நம்பிக்கைளை உள்ளடக்கியுள்ளன. தனிமனித நிலையில் சமயம் என்பது உணர்வு நிலைப்பட்டதாகவும், சமூக

அங்கீகாரத்திற்கான பொருள் மற்றும் பொருள்சாரப் பண்பாட்டுப் பொருண்மையாகவும் விளங்கின்றமை கவனத்திற்குரியது. சமயத்தின் வழியேயான சமூக, பண்பாட்டு அடையாளம் மிகவும் சமூக வலிமையுடன் விளங்கின்றது.

பண்பாடுகளுக்குப் பண்பாடு சமூகத்திற்கு சமூகம் வெவ்வேறுபட்ட சமய நம்பிக்கைகள் பயில்வுகள் காணப்படுகின்றன. எந்த ஒரு உலகப் பண்பாட்டினை எடுத்துக் கொண்டாலும் ஏதோவொரு சமய நம்பிக்கையுடன் இணைந்ததாகவே காணப்படுகின்றது. தொல்லியல் ஆய்வுகளின் மூலம் உலகில் சமயம் சார்ந்த செயற்பாடுகள் இன்றைக்கு 1, 25, 000 ஆண்டுகளுக்கு பழைமைத் தன்மையுடையனவாகவே விளங்குகின்றன. கிழக்கு ஆபிரிக்க குகைகளில் கண்டறியப்பட்ட நியண்டதால் மனிதர்களின் குகை ஓவியங்கள் இதனை மெய்ப்பிக்கின்றன. அந்தவகையில் அன்று தொட்டு இன்று வரையான சமயம் சார்ந்த நம்பிக்கைகள் மக்களின் சமூகவாழ்வில் ஏதோவொரு வகையான பங்கு பணியினைக் (Role) கொண்டிருந்து வருகின்றமை புலப்படுகின்றது. இந்நிலையில் மானிடவியல் நோக்கில் மூன்று முதன்மையான விடயங்களை மக்கள் வாழ்வில் சமயம் என்னும் பொருள் கொள்ளும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**1. சமூக ஓழுங்கினைப் பேணுதல்**

மக்கள் வாழ்வில் திடிரென்று தோன்றும் குழப்ப நிலையினை ஓழங்குபடுத்தி அவர்களையும் அவர்கள் சார்ந்துள்ள சமூகத்தினையும் மீளவும் சீரான சமூக இயக்கத்தில் இயைந்து செயற்பட சமயங்கள் வழிவகுகின்றன. சமூகத்தின் மரபுகளையும், வளங்களையும் பின்பற்றுவதற்கு மக்களை சமயங்கள் தூண்டுகின்றன. அதாவது நீதி நெறிமுறை சார்ந்த சமூகவாழ்வுக்கான அடிப்படைகளை மக்கள் மத்தியில் நிலைநிறுத்துவதற்கு சமயங்கள் பல்வேறு வழிமுறைகளை பின்பற்றி வருகின்றன. எடுத்துக்காட்டாக புராண ஐதீகங்கள் தொடங்கி சடங்கு நடைமுறை வரையான அனைத்து விடயங்களையும் தற்காலச் செழிப்பான வாழ்விற்கும், இறப்பிற்குப் பின்னரான வாழ்விற்கும் அவசியமான ஒன்றாக முன்னிறுத்துக்கின்றமை கவனத்திற்குரியன. இதற்கு தர்மம், கொல்லாமை, நீதிநெறிமுறைசார்ந்த வாழ்வியல் கருத்துகள் என பல்வேறுபட்ட சமூக நேர்நிலை அசைவியக்கத்தினை வலியுறுத்தும் வகையில் இவைகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

சமயங்களின் மிகபெரிய ஒரு விடயமாக விளங்குவது இறப்பிற்கு பின்னரான வாழ்வு பற்றி எதிர்வு கூறல்களாகும். இன்றை நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியில் கிடைக்கப்பெற்ற அனுகூலங்கள் அனைத்தும் அன்றாட வாழ்வினை மையமிட்டதாகவே அமைகின்றன. ஆனால் எல்லா மனிதர்களிடையேயும் இறப்பிற்குப் பின்னாரா வாழ்வு எவ்வாறு இருக்கும் என்று அறிதல் தொடர்பான ஆவல் நீடித்து இருக்கின்றது. இந்நிலையில் உலகின் எல்லா சமயங்களும் இறப்பிற்குப் பின்னரான வாழ்வு இரட்டை தன்மையுடைய ஒன்றாக விளக்குகின்றது. ஒன்று இறைவனுடன் அவரது உலகில் வாழும் பேரானந்த வாழ்வு, மற்றையது துன்பங்கள் நிறைந்த வாழ்வு. இவ்விரண்டு எதிர்வு கூறல்களை அடிப்படையாகக் கொண்டு மக்களுடை அன்றாடச் செயல்களை நெறிப்படுத்துகின்றன. இவை மக்கள் வாழ்வில் சமூக ஓழங்கினை பேணுவதற்கு துணைநிற்கின்றது. .

**2. உளவியல் ரீதியான ஆதரவு**

மனித வாழ்வு என்பது வெறுமனே இரத்தமும் தசையும், எலும்பும் நிறைந்த உடலியல் கூறுகளுடன் மட்டும் தொடர்புடைய ஒன்றல்ல. மனமும் அதுசார்ந்த எண்ணங்களும் இணைந்த ஒன்றாகவே மனிதவாழ்வு காணப்படுகின்றது. பொதுவாகவே சமயம் சார்ந்த சடங்குகள் அன்றாட மனிதவாழ்வில் புதிய வகையான அனுபவங்களை மக்களுக்கு வழங்குகின்ற வகையில் அமைந்துள்ளன. இச்சடங்குகள் சிலமயங்களில் சமூக மாற்றத்திற்கான ஒரு ஏற்பாடகவும் அமைகின்றன. அதாவது பருவரீதியான மாற்றங்களினலும் சரி, அன்றாட வாழ்வில் திடிரென்று தோன்றும் நோய், விபத்து, உயிர் இழப்பு, பிரிவு போன்றவற்றினால் உருவாகும் சமூக இயங்கியல் சார்ந்த மாற்றங்கள் ஆனாலும் சரி, அது நிகழும் நேரத்தில் போதுமான சமூக ஆதரவினையும், சமூக உளசீரம்மைப்படுத்தலையும் (counselling and social support) வழங்கும் வகையில் சமயங்கள் சடங்குகளை பேணிவருகின்றன.

சுனாமிக்குப் பின்னரா மனவடுக்கள் சார்ந்த உளநோய் பிரச்சினைகள் அதிகம் உணரப்பட்ட காலப்பகுதியில், ஒரு பெண்ணிற்கு ஏற்பட்ட உளசீரன்மையினையை ஓர் உளவியல் சிறப்பு மருத்துவர் சமயச் சடங்குகளின் வழியே குணமாக்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கையின் வடக்கு பகுதியில் உள்ள ஒரு கடற்கரையோரக் கிராமத்தில் வாழ்ந்த ஒரு பெண்ணினுடைய கணவர் மற்றும் பிள்ளைகள் சுனாமி பேரனர்த்தத்தில் உயிர் காவுகொள்ளப்பட்டனர். அவர்களுடைய உடலங்கள் கண்டெடுக்கப்படவில்லை. இந்நிலையில் குறித்த பெண்ணிற்கு ஏற்பட்ட உளநெருக்கிட்டினை நீக்குவதற்கு குறித்த உளவியல் மருத்துவர் இறந்த போனவர்களுடை புகைப்படங்களுக்கு சமயம் சார்ந்த இறுதிச் சடங்கினை செய்து முடித்தார். இதன் பின்னர் குறித்த பெண்ணுடைய உளநெருக்கீட்டில் மாற்றம் வந்துள்ளமையினை தன்னுடைய ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் சமயம் சார்ந்த உளவியல் சார்ந்த ஆதாரவுகள் பல்நிலைத் தன்மை கொண்டனவாக விளங்குகின்றமையினை அறியமுடிகின்றது.

இடர்காலங்களில் தனியனுக்கும் மட்டுமன்றி சமூகத்திற்கும் தன்னம்பிக்கை வழங்கும் வகையில் சமயம் சார்ந்த கருத்துக்கள் அவ்வப்போது வழங்கப்படுகின்றது. இவை தனிமனி வாழ்வு, சமூக வாழ்வு தொடர்பான விருப்பத்தினை மக்கள் மத்தியில் தக்கவைத்துக் கொள்ள உதவுகின்றது. அதாவது சுயநிராகரிப்பு என்னும் எண்ணம் தனிமனிதனுக்கோ சமூகத்திற்கு ஏற்படும் போது அது தற்கொலைக்கான மனத் தூண்டுதலை ஏற்படுத்திவிடும். இவ்வகையான மன உணர்வுகளிலிருந்து தற்காகலிகமாகவோ, நிரந்தரமாகவோ விடுபடுவதற்கு சமயம் சார்ந்த நம்பிக்கைகள் முதன்மை பெறுகின்றது. இங்கு 'தெய்வ பக்தி' என்னும் கருத்தினங்கள் மக்களுக்கு போதுமான சமூக உள ஆதரவினை வழங்குகின்றது எனலாம்.

யாழ்ப்பாண சமூகம் கடந்த முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக உள்ளக இனமரணப்பாட்டுச் சூழலினை எதிர்கொண்டுவந்துள்ளது. இடப்பெயர்வு, சொத்துக்களின் அழிவு, வாழ்வாதாரம் பாதிக்கப்படுதல், மருத்துவத் தட்டுப்பாடு, உணவுத் தட்டுபாடு என்ற சமூக நெருக்கடி நிலைகளுடன் நெருங்கிய உறவினரை இழத்தல், அவர்கள் காணமால்

போதல், அங்கவீனம் ஏற்படதல் என்ற உடல் உளரீதியிலான நெருக்கடிகளிடையே யாழ்ப்பாண சமூக வாழ்வின் நீடித்த நிலைக்கு சமயங்களும் காரணமாகின்றன. குறிப்பாப் போர்க்காலச் சூழலில் 'கலையாடி குறி சொல்லும்' சிறிய ஆலயங்களின் எழுச்சி இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. பேராசிரியர் என். சண்முகலிங்கனுடைய துர்க்கையின் புதுமுகம் தொடர்பான ஆய்வில் 1980களுக்குப் பின்னர் தெல்லிப்பளைத் துர்க்கை அம்மன் கோயிலுக்கு துணைக் கோவில்களாக யாழ்குடா நாட்டில் பல சிறிய கோவில்கள் எழுச்சி பெற்றுள்ளமையையும் அவற்றின் சமூகச் செயற்பாட்டினையும் மிகவிரிவாக ஆராய்ந்துள்ளார். ஏனெனில் இக் காலப்பகுதியிலேயே இலங்கையின் உள்ள நாட்டுப் போர் மிகத் தீவிரம் அடைந்தது.

**3. அறிகை சார்ந்த பங்குபணி**

சமயங்கள் மக்கள் தங்களுடைய வாழ்வில் எதிர்கொள்ளும் விடை காணமுடியாத வினாக்களுக்கு விடையளிப்பதன் வழியே மக்களுடை வாழ்வில் குறிப்பிடத்தக்க இடத்தினை பெறுகின்றது. இவ் விடைகள் அதிகமானவை இயற்கை கடந்த ஆற்றலின் அதிகாரத்தின் அடிப்படையில் அமைகின்றன. இன்று பல்வேறு விஞ்ஞான ரீதியாக கேட்கப்பட்டு வரும் வினாக்களுக்கான விடைகளை மக்கள் முன்னரே சமயம் சார்ந்த அடிப்படையில் விளங்கிக் கொண்டுள்ளனர். இந்நிலையில் கார்ல் (Carl) சமயம் என்பது மக்களை சமூக வழியில் முதிர்ச்சியடையவும் அவர்களுக்கு ஏற்படும் அகமுரண்பாடுகளைத் தீர்க்கவும் உதவுகின்றது என்பார். அதேவேளை எரிக் ப்ரோமன் (Eric Froman) கூறும் போது சமயம் மக்களின் குறிப்பிட்ட சமூக வாழ்வில் சமூகப் பெறுமானத்தைப் பெறுவதற்கு உதவுகின்றது; மேலும் இதனையே வழங்குகின்றது என்று கூறிகின்றார்.

இந்தவகையில் மக்கள் வாழ்வில் சமயம் என்பது வெறுமனே நேர்நிலையான கருத்துக்களை மட்டும் கொண்டதல்ல; மாறாக சமூக முரண்பாடுகள் சார்ந்த விமர்சனங்களும் சமயம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது நினைவுகடந்த நிலையில் (unconscious) மக்களை இயக்கிக் கொண்டிருப்பதாக முரண்பாட்டுச் சிந்தனைக் கோட்பாட்டாளர்கள் சமயத்தினை விமர்சிக்கின்றனர். குறிப்பாக சமயம் சார்ந்த நம்பிக்கைகளும், ஐதீகங்களும், சடங்குகளும் சிலவேளைகளில் சமூகப் பாரபட்சம், சமூகத் தனிமைப்படுத்தல், தனிமனித சுதந்திரக் கட்டுப்பாடு போன்றவற்றினை உருவாக்கி சமூகப் பிரச்சினையை மக்கள் மத்தியில் உருவாக்குகின்றன என்பது போன்ற விமர்சனக் கருத்துக்கள் கவனத்திற்குரியன. மேலும் தன்னிலை மறந்த தனிமனிதச் செயற்பாடுகளுக்கு அடிப்படையாகவும் சமயம் சார்ந்த தீவிரபோக்கும் சமயத்தின் சமூகப் பங்குபற்றலை விமர்சிக்க வழிசெய்கின்றது.

உலகில் உள்ள ஒவ்வொரு சமயங்களும் தத்தமது தனித்துவங்களைப் பாதுகாத்துக் கொள்ள முயல்கின்றன. இதற்காக பல்வேறுபட்ட சமூகச் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் அவை ஆயத்தமான நிலையிலேயே உள்ளன. அதாவது சமயத்தின் பெயரால் செய்யப்படும் அனைத்தும் ஒவ்வொரு தனியனுடைய அல்லது சமூகத்தினுடைய இன்றைய சுபீட்சமான வாழ்விற்கும் இறப்பிற்குப் பின்னரான மோட்ச வாழ்விற்கும் வழிவகுக்கும் என்பதில் மக்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத

நம்பிக்கையானது சமயத்தின் பெயரால் செய்யப்படும் அனைத்து நேர்-எதிர் நிலைச் செயல்களுக்கு அடிப்படையாகின்றது. இவ்வகையான செயல்களின் வழியே கடவுளின் திருப்தியைப் பெறுவதற்கு மக்கள் தங்களை அர்ப்பணிக்கின்ற மனநிலை பல்வேறுபட்ட தனிமனித, சமூக விவகாரங்களுக்கு அடிப்படையாக அமைகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக சமயத்தின் பெயரால் தனிமனிநிலையில் தன்னைத் தானே வருத்திக் கொள்வதும், சமூகநிலையில் சமூக ஒடுக்கு முறையைச் செயற்பாடுகளையும் மேற்கொள்வதும் சமயத்தினுடை சமூக நலச் செயற்பாடுகளை கேள்விக்குள்ளாக்குவதுடன் சமயம் தொடர்பான விமர்சனக் கருத்துக்களை முன்வைக்கவும் வழிவகுக்கின்றது.

இவ்வாறாக சமயத்தின் மறுபக்கம் நவீன உலகில் பொதுவாக மதஅடிப்படைவாதம், மதப்பிடிவாதம், மதத்தீவிரவாதம் போன்ற கருத்துநிலைகளின் அடிப்படையில் விளங்கிக் கொள்ளப்படுகின்றன. இவை சமயத்தின் சமூக மேலாதிக்கத் தன்மையையே புலப்படுத்துகின்றது. இதற்கு போதுமானளவிலான எடுத்துக்காட்டுக்கள் அன்றாட சமூக வாழ்வில் ஒவ்வொரு தனிமனிதனும் பல்வேறு வழிகளில் அறிந்து கொள்ளமுடியும். மேலும் பல்வேறு நாடுகளின் இன்றைய உள்ளக முரண்பாடுகள் என்றாலும் சரி, நாடுகளுடனான முரண்பாடுகள் என்றாலும் சரி இவை அனைத்திற்குப் பின்னணியில் சமயம் சார்ந்த கொள்கைகளுக்குக் கொடுக்கப்படும் தவறான அர்த்தப்பாடுகளும், தவறான வழிநடத்தல்களும் அதிகமான பங்கினைப் பெறுகின்றன. இவ்வகையான போக்குகள் சமயத்தினுடைய புனிதமான, சமூக மேம்பாட்டுக்கான, சமூக நல்லிணக்கத்திற்கான வழிமுறைகளை மீள மீளத்தேடி அவற்றினை முதன்மைப்படுத்தும் வகையில் சமயநிறுவனங்களை ஒழுங்கமைக்க வேண்டிய தேவையை எமக்குக் காட்டிநிற்கின்றன.

தொகுத்து நோக்கும் போது மக்கள் வாழ்வில் சமயம் என்பது ஒருபக்கத் தன்மையுடையன்று; அது பன்மியத் தன்மை கொண்டது. தனிமனித வாழ்விலும், சமூகவாழ்விலும் சமயத்தின் புனிதமான பக்கங்களை பயன்படுத்தி சமூக நீதியையும், சமூக மேம்பாட்டினையும் காண்பதற்கு முயற்சிசெய்ய வேண்டியது ஒவ்வொரு சமயத்தைச் சேர்ந்தவர்களுடைய கடமையாகும். அதேநேரம் சமூக நீதிக்கும், சமூக நலனுக்கும் சமயம் சார்ந்த கருத்துக்களை தவறாகப் பயன்படுத்தி தனிப்பட்ட அல்லது குறிப்பிட்ட சமூக நலனுக்குகாக சமயத் தீவிரவாதத்தைத் தூண்டுதல் வழியே சமூக அமைதியையும், சமூக நல்லிணக்கத்தினையும் கேள்விக்குள்ளாக்கும் சமயம் சார்ந்த செயல்பாடுகளிலிருந்து மக்களை மீட்கவேண்டிய கடப்பாடம் குறிப்பிட்ட ஒவ்வொரு சமயநிறுவனத்திற்குரியதாகும். இதுவே இனறைய உலகின் அமைதியான சமூகவாழ்விற்கு அவசியமானதும்.

**துணைநூல்கள்**

பக்தவத்சல பாரதி. 2005, *மானிடவியல் கோட்பாடுகள்.* புதுச்சேரி: வல்லினம்.
Glazier, Stephen D (ed.). 1997. *Anthropology of Religion.* London: Greenwood Press.